29.07.2026

# சிறைப்பணி ஞாயிறு - 2026

## "அழுகுரல் கேளுங்கள், காயத்தை ஆற்றுங்கள், நம்பிக்கையைப் புதுப்பியுங்கள்"

## ஆகத்து 9, ஞாயிறு

இறை இயேசுவில் அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே,

வாழ்த்துகளும்! இறைவேண்டல்களும்!

கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப் பெற்று தூயோராக்கப்பட்டு, இறைமக்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ள உங்களுக்கும், எல்லா இடங்களிலும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடும் யாவருக்கும், நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.

**"சிறைப்பட்டோரின் பெருமூச்சு உம் திருமுன் வருவதாக! கொலைத் தீர்ப்புப் பெற்றோரை உம் புயவலிமை காப்பதாக" (திபா 79:11).**

இன்றைய உலகில் அழுகுரல்கள் அதிகம் கேட்கின்றன. நிராகரிக்கப்பட்டவர்கள், மறக்கப்பட்டவர்கள், விளிம்பு நிலை மக்கள், பிறந்ததையே வீண் எனப் பிறப்பின் நோக்கம் அறியாத பலர், சிறைகளில் கைதிகளாகச் சூழ்நிலையாலும், சூழ்திருப்பவர்களின் சூழ்ச்சிகளாலும் ஏமாற்றப்பட்டும், தவறு செய்துவிட்டோம் தண்டனையோடு நம் தவறு மறக்கப்படாதா என்றும் ஏக்கத்தோடும், அழுகுரல்கள் ஆகப்பெரிய சிறைச் சுவர்களையே அழும் அதிசய சுவராம் எருசலேமை நமக்கு நினைவுபடுத்துகின்றன. இத்தகைய சிறைச் சுவர்கள், பூட்டியக் கதவுகள், இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் இருக்கும் நமது சகோதரிகளின், சகோதரர்களின் அழுகுரல்களைத் துடைக்கும் நம்பிக்கையோடு அவர்களுக்கு இந்திய – தமிழக அளவிலும், நம் கோட்டாறு மறைமாவட்ட அளவிலும் இயன்ற உதவிகளை செய்து வருகின்றோம். அவைகள் பின்வருமாறு: இல்லவாசிகளை சந்தித்தல், மனரீதியான ஆற்றுப்படுத்துதல், சட்ட உதவிகளுக்கு வழிகாட்டுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல், பொருளாதார உதவிகள் செய்தல், இல்லவாசிகளின் குடும்பங்களுக்கு

வழிகாட்டுதல் போன்ற இன்னும் பல பணிகளைத் தொடாந்து செய்து கொண்டிருக்கின்றோம்.

ஒவ்வோர் ஆண்டும் ஆகத்து மாதம் இரண்டாம் ஞாயிறை சிறைப்பணி ஞாயிறாக உலக அளவில் கொண்டாடி வருகின்றோம். இவ்வாண்டு சிறைப்பணி ஞாயிறு வருகின்ற ஆகத்து 9ஆம் நாள் **"அழுகுரலைக் கேளுங்கள், காயத்தை ஆற்றுங்கள், நம்பிக்கையைப் புதுப்பியுங்கள்"** என்னும் மையச் சிந்தனையில் சிறப்பிக்க உள்ளோம். அசிசி நகர் புனித பிரான்சிஸின் 800ஆவது ஆண்டை சிறப்பிக்கும் இப்புனித நாட்களில் அமைதியின் தூதராம் அவரது பரிந்துரை சிறைவாசிகளின் உள்ளங்களிலும், அவரது குடும்பங்களிலும் நிலையான அமைதியை வழங்க நாம் இறைவேண்டல் செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். இதற்கான தமிழகச் சிறைப்பணி தலைமை ஆயரின் சுற்றுமடலும், வழிபாட்டுக் குறிப்புகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. எனவே தாங்கள் தங்கள் பங்கில் சிறைப்பணி ஞாயிறை சிறப்பித்து சிறைப்பணி குறித்த விழிப்புணர்வை இறைமக்களிடையே உருவாக்கிடவும், சிறைப்பணியாற்ற தங்கள் பங்கிலிருந்து தன்னார்வலர்களை அனுப்பி வைக்கவும் கேட்டுக்கொள்கின்றேன். இவ்வேளையில் நம் மறைமாவட்டத்தில் சிறைப்பணியை செவ்வனே ஆற்றும் அருள்பணிக்குழுச் செயலரையும், உடன் உழைப்பாளர்களையும் நன்றியோடு நினைவு கூறுகிறேன். எனவே கடந்த ஆண்டை போன்று இவ்வாண்டும் சிறைப்பணி ஞாயிறன்று பங்கு இறைமக்களை ஊக்கப்படுத்தி, சிறைப்பணிக்காக சிறப்புக் காணிக்கை பிரித்து அக்காணிக்கையை மறைமாவட்ட பொருளரிடம் ஒப்படைக்க அன்போடு வேண்டுகின்றேன்.

அன்னைமரியாவின் அருள்துணையும் கடவுளின் அன்பும் உங்களோடு என்றும் தங்குவனவாக.

*கிறிஸ்துவின் மனநிலையில்,*

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**

(கோட்டாறு மறைமாவட்டம்)

---

**குறிப்பு :** இச்சுற்றுடல் ஆகத்து 02, ஞாயிறன்று நம் மறைமாவட்டத்தின் எல்லா ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் வாசிக்கப்பட வேண்டும்.